DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.278/2022**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 2<br>Defence<br>Court |
| Name | : | திரு. முப்புடாதி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of October 2025.

**(A1, A2 present. )**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது அய்யாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் ஓசூரில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்துபோன மாரிச்செல்வம், என்னுடைய சித்தப்பா மகனாவார். இந்த வழக்கில் புகார் கொடுத்த குளத்தூரான் மகன் முப்புடாதி எனக்கு தம்பி முறைவேண்டும்.

எனது தம்பிகளான முப்புடாதியும், மாரிச்செல்வமும் அய்யாபுரம் ரயில்வே கேட் அருகே ஒருகோழிப்பண்ணை நடத்திவந்தார்கள். ஆஜர் 1ம் எதிரி சரவணன், ஜே.சி.பி வைத்துள்ளார், டிரான்ஸ்போர்ட் தொழிலும் செய்துவந்தார்.

2) கடந்த 2022ம் வருடம், எனது தம்பி மாரிச்செல்வம், எதிரி சரவணனுக்கு சொந்தமான லாரிகளின் டயர்களை சேதப்படுத்தியது சம்பந்தமாக அவர்களுக்குள் முன்விரோதம் இருந்து வந்தது. இது சம்பந்தமாக எதிரி சரவணன் தென்காசி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து, அதில் எனது தம்பி மாரிச்செல்வம் கைதுசெய்யப்பட்டார். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்தது. அந்த சூழ்நிலையில் எதிரி சரவணன் சேதமடைந்த தனது லாரி டயர்களுக்கு எனது தம்பி மாரிச்செல்வத்திடம் நஷ்டஈடு கேட்டதாக எனது தம்பி என்னிடம் சொன்னார். ஊர்பெரியவர்களின் முன்னிலையில் பேசி அந்த பிரச்சனையை தீர்த்துக்கொள்வோம் என்று எனது தம்பி எதிரியிடம் தெரிவித்துவிட்டார்.

3) இந்நிலையில் கடந்த 23.04.2022ம் தேதி மதியம் 12.00 – 12.30 மணியளவில் நானும், எனது தம்பி முப்புடாதியும் கோழிப்பண்ணைக்கு சென்றுகொண்டிருந்தோம். எங்களுக்கு முன்னரே மாரிச்செல்வம் அவருக்கு சொந்தமான ஹோண்டா டியோ வாகனத்தில் கோழிப்பண்ணைக்கு சென்றார். நான் எனக்கு சொந்தமான ஹீரோ ஹோண்டா வாகனத்தை கோழிப்பண்ணைக்கு ஓட்டி சென்றேன். அப்போது அய்யாபுரம் மணக்க உடையார் சாஸ்தா கோவில் அருகே பல்சர் வாகனத்தில் வந்த எதிரி சரவணன் எதிர்புறம் வந்த எனது தம்பியின் வாகனத்தை நிறுத்திவிட்டார். பின்னால் வந்துகொண்டிருந்த நாங்கள் வந்து பார்த்தபோது இருவரும் பேசிக்கொண்டு இருப்பதுபோல் தெரிந்தது. பேசிக்கொண்டு இருக்கும்போதே எதிரி சரவணன், எனது தம்பி மாரிச்செல்வத்தை தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசி நஷ்டஈடு கேட்டால் கோர்ட்டில் பார்த்துக்கொள்ளலாம் என்றா சொல்கிறாய், என சொல்லிக்கொண்டே வாகனத்திலிருந்து கீழே இறங்கி அவர் வசம் வைத்திருந்த அரிவாளை எடுத்து, நீ என் வாகனத்தை வெட்டியதுபோல் நான் உன்னை வெட்டுகிறேன் என சொல்லி, முதலில் எனது தம்பியின் கழுத்தை நோக்கி ஓங்கி வெட்டினார், அந்த வெட்டு எனது தம்பியின் இடது பக்க காது பகுதியில் பட்டு காது துண்டாகி ரத்தக்காயம் ஏற்பட்டது. மீண்டும் எதிரி வெட்டியபோது

எனது தம்பி தனது இடது கையால் எதிரியை தடுக்க முயற்சிசெய்தபோது, இடது கை மூட்டு, மணிக்கட்டு, கட்டைவிரல், மோதிரவிரல், சுண்டுவிரல் ஆகியவற்றில் வெட்டுப்பட்டு துண்டாகின. இதன் காரணமாக எனது தம்பி ரத்த வெள்ளத்தில் கீழே சரிந்துவிட்டார்.

4) கீழே விழுந்த எனது தம்பி மாரிச்செல்வத்தை மீண்டும் எதிரி சரவணன் தன்னிடமிருந்த அரிவாளால் தோள்பட்டை, கழுத்து ஆகிய பகுதிகளில் வெட்டினார். அப்போது நாங்களும், அக்கம்பக்கமிருந்த நபர்களும் வெட்டாதே, வெட்டாதே என்று கூச்சலிட்டோம். உடனே எதிரி சரவணன் எங்களை பார்த்து, பக்கத்தில் வந்தால் உங்களையும் இதே போல் வெட்டிவிடுவேன் என்று மிரட்டினார். அதன் பின்னர் அரிவாளை எடுத்து தனது வாகனத்தில் வைத்துக்கொண்டு மேற்குதிசை நோக்கி சென்றுவிட்டார். நான் பக்கத்தில் சென்று பார்த்தபோது எனது தம்பி சுயநினைவின்றி கீழே கிடந்தார். இறந்துவிட்டாரா என்பதை என்னால் அப்போது உறுதியாக தீர்மானிக்க முடியவில்லை. உடனே நான் தனியார் ஆம்புலன்சிற்கு போன்செய்து வரவழைத்தேன். ஆம்புலன்ஸ் வந்தவுடன் நானும், எனது சித்தப்பா மகன் முப்புடாதியும் மாரிச்செல்வத்தை ஆம்புலன்சில் ஏற்றி தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். அங்கு மருத்துவர் எனது தம்பியின் உடலை பரிசோதனைசெய்து அவர் இறந்துவிட்டதாக சொன்னார். மருத்துவர் காவல்நிலையத்தில் எங்களை புகார் கொடுக்கசொன்னார். உடனே நாங்கள் அருகிலுள்ள ஒரு பெட்டிக்கடையில் பேப்பர் பேனா வாங்கி, எனது தம்பி முப்புடாதி புகாரை எழுதிய பின்னர் நாங்கள் தென்காசி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அந்த புகார் மனுவில் நான் அறிவேன் சாட்சியாக கையொப்பமிட்டிருந்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுதான் அன்றைய தினம் நாங்கள் காவல்நிலையத்தில் கொடுத்தது.

5) புகார் கொடுத்துவிட்டு நாங்கள் மீண்டும் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். அப்போது எங்கள் ஊரை சேர்ந்த முப்புடாதி என்ற எனது பெரியப்பா முறை கொண்ட ஒருஉறவினர், எங்களை பார்த்து மாரிச்செல்வம் மணக்க உடையார் சாஸ்தா கோவில் செல்வதற்கு முன்னரே அய்யாபுரம், காமராஜர் சிலை அருகே வைத்து எதிரி முத்துக்குமார் மாரிச்செல்வத்திடம் தகராறு செய்தார் என்றும், எதிரி முத்துக்குமார் தனது மாமா சரவணனுக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டு இன்று எப்படியாவது

மாரிச்செல்வத்தை முடித்துவிடவேண்டும் என்று பேசியதாக என்னிடம் குறிப்பிட்டார். மேலும், மாரிச்செல்வம் ஊரிலிருந்து கிளம்பி வந்துகொண்டிருக்கிறான், நான் அவன் பின்னாலேயே வருகிறேன் என்று முத்துக்குமார் சரவணனிடம் பேசியதாக எங்கள் உறவினர் முப்புடாதி எங்களிடம் சொன்னார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் எங்களை விசாரித்தார். சம்பவ இடத்திற்கு அழைத்து சென்று எங்களை விசாரணை செய்தபோதும், முத்துக்குமார் சரவணனிடம் பேசியது சம்பந்தமாகவும் நான் தெரிவித்தேன். போலீசார் அன்றைய தினம் மாலை 06.00 மணி வரை எங்கள் ஊரில் சம்பவ இடத்தில் இருந்தவர்களையும், பிறரையும் விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். அதன் பின்னர் நான் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். சம்பவத்தின்போது எதிரி சரவணன், எனது தம்பியை வெட்ட பயன்படுத்திய அரிவாளை என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அரிவாள்தான் எதிரி சரவணன் எனது தம்பியை வெட்ட பயன்படுத்தியது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவதற்கு முந்தைய தினம் நான் ஊரில்தான் இருந்தேன். அன்றைய தினம் இரவு எங்கள் ஊர் காமராஜர் சிலை அருகே பொன்னுசாமி மகன் சரவணன் என்பவருக்கும் எனது சித்தப்பா மகனுக்கும் தகராறு நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அப்போது எனக்கு தெரியாது, இந்த பிரச்சனையெல்லாம் முடிந்த பிறகு தெரிந்துகொண்டேன். அன்றைய தினம் இரவு 10.30 மணிக்கு மேல் காயம்பட்ட நபர்களை தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்று அதன் பின்னர் தென்காசி அரசு மருத்துவமனையிலும் அவர்களுக்கிடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த இரண்டு பிரச்சனைகளையும் தொடர்ந்து அன்றைய தினம் இரவிலிருந்தே எங்கள் ஊருக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது.

2) இறந்துபோன எனது தம்பி மாரிச்செல்வம் சம்பவத்திற்கு 10 நாட்களுக்கு முன்னர் ஜெயராம் என்பவரது மகளை வழிமறித்து ஆபாசமாக பேசி தகராறு செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இது தொடர்பாக 12.04.2022 அன்று ஒரு புகார் கொடுக்கப்பட்டு,

குற்ற எண். 213/2022 வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஜெயராமின் குடும்பத்தினர் எனது தம்பியின் மீது மிகுந்த பகையுடன் இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த கிழமேல் ரோட்டிற்கு தெற்கு பக்கம் எங்கள் ஊருக்கு செல்லும் சாலை செல்கிறது என்றால் சரிதான். அந்த ரோட்டிலிருந்து காமராஜர் சிலைக்கு 2 நிமிடத்தில் நடந்து வந்துவிடலாம் என்றால் சரிதான். எங்கள் வீட்டிலிருந்து மெயின்ரோட்டிற்கு வரவேண்டும் என்றால் காமராஜர் சிலையை தாண்டித்தான் வரவேண்டும் என்றால்சரிதான். இருசக்கர வாகனத்தில்வந்தால் எங்கள் வீட்டிலிருந்து 2 நிமிடங்களில் மெயின் ரோட்டிற்கு வந்துவிடலாம் என்றால் 4 நிமிடங்களாகும். அன்றைய தினம் நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு வந்ததற்கு வேறு தனிப்பட்ட காரணம் எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

3) நான் தென்காசி காவல்நிலையத்தில் சிறிது காலம் Friends of Police ஆக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். அதனால் காவல் நிலைய தொடர்புகளும் அவர்களுடைய பணிகளும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். அதனால் காவல்நிலைய தொடர்பு எண்கள் மற்ற தொலைபேசி எண்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடன் நான் காவல்நிலையத்திற்கு தொலைபேசியில் தகவல் சொல்ல முயற்சி செய்தேனா என்றால் எனது தம்பி இறந்துவிட்டாரா என்பதை என்னால் உறுதிபடுத்த முடியாத காரணத்தினால் நான் தகவல் சொல்லவில்லை. தனியார் ஆம்புலன்ஸ் எண் என்னிடம் இருந்த காரணத்தினால் நான் உடனே ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி வரவழைத்தேன். நான் உடனே ஆம்புலன்சிற்கு போன் செய்தேன் என்றால் சரிதான், என்னுயை கைப்பேசியிலிருந்துதான் தகவல் சொன்னேன். அது தனியார் ஆம்புலன்ஸ் என்றால் சரிதான். அந்த தனியார் ஆம்புலன்ஸ் டிரைவரை விசாரணை செய்தால், நான் தொலைபேசியில் அழைத்து தகவல் சொன்ன விவரம் மற்றும் அவர் சம்பவ இடத்திற்கு வந்தபோது அங்கிருந்த நபர்கள் குறித்த விவரம், அப்போது நேரம் என்ன என்ற விவரம் துலங்கும் என்றால் சரிதான்.

4) ஆம்புலன்ஸ் ஓட்டுநருடன் மேலும் ஒரு நபர் துணைக்கு வந்திருந்தார் என்றால் சரிதான். ஆம்புலன்சில் வந்த நபர்கள் எனது தம்பி உயிரோடிருக்கிறாரா இல்லையா என்பது குறித்து பரிசோதித்து பார்க்கவில்லை. சம்பவ இடத்திலிருந்து தென்காசி அரசு

மருத்துவமனை சுமார் 10 கி.மீ தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். நான் ஆம்புலன்சிற்கு தகவல் சொன்ன அரைமணி நேரம் கழித்துதான் ஆம்புலன்ஸ் சம்பவ இடத்திற்கு வந்தது என்றால் சரிதான். ஆம்புலன்ஸ் வரும்வரையில் நான் மெயின்ரோட்டில்தான் இருந்தேன் என்றால் சரிதான். அப்போது ஊரில் உள்ளவர்களுக்கும் நான் தகவல் சொன்னேன் என்றால் சரிதான். ஊரிலிருந்து எங்கள் உறவினர்கள், இறந்தவரின் பெற்றோர்கள் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்களா என்றால் அவர்கள் வரவில்லை. அந்த மெயின்ரோட்டில் பயணம் செய்த அனைவரும் நின்று வேடிக்கை பார்த்தார்கள் என்றால் சரிதான். எனது தம்பியை ஆம்புலன்சில் வந்த ஓட்டுநர் மற்றும் உதவியாக வந்த நபருடன் சேர்ந்து நானும் தூக்கிவைத்தேன் என்றால் சரிதான். வெட்டுப்பட்டு கிடந்த எனது தம்பி மாரிச்செல்வத்தை, முப்புடாதி மாரிச்செல்வத்திற்கு உயிர் உள்ளதா என கைகளால் தூக்கிப்பார்த்தார். அப்போது முப்புடாதியின் மீது ரத்தக்கறை ஏதும் படவில்லை. மாரிச்செல்வத்தை ஆம்புலன்சில் ஏற்றும்போது எனது கைகளில் ரத்தம்பட்டது, ஆனால் எனது உடைகளில் ரத்தம்படவில்லை.

5) எனது தம்பி மாரிச்செல்வத்தை அரசு மருத்தவமனைக்கு அழைத்து செல்வதற்கு சுமார் அரைமணி நேரமானது என்றால் சரிதான். சம்பவத்தின்போது எனது தம்பி மாரிச்செல்வம் சென்ற இருசக்கர வாகனம் ஸ்டாண்ட் போட்டு நிறுத்தப்பட்டிருந்தது. வாகனத்தை நிறுத்திவிட்டுதான் எனது தம்பி கீழே இறங்கி பேசிக்கொண்டிருந்தார். எனது தம்பி இறங்கி நின்றபோதுதான் முதல் வெட்டு விழுந்தது. எதிரி சரவணன் அரிவாள் எடுத்து வருவதை பார்த்தபிறகும் எனது தம்பி ஓட முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி அரிவாளை எடுப்பதை பார்த்தநான் எனது தம்பியை எச்சரிக்கை செய்தேனா என்றால் இல்லை. நான் எதிரியை தடுக்க முயற்சிசெய்தேனா என்றால் வெட்டாதே என்று கூச்சலிட்டேன். அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்ற 15 நிமிடங்களில், மருத்துவர் எனது தம்பியை பரிசோதனை செய்து இறந்துவிட்டதாக அறிவித்தார். மருத்துவர் காயம்பட்ட நபரின் விவரங்கள் குறித்து என்னிடம் கேட்டு தெரிந்துகொண்டார் என்றால் சரிதான். அந்த விவரங்களை குறித்துக் கொண்டுதான் எனது தம்பியை மருத்துவர் பரிசோதனை செய்தார் என்றால் சரிதான்.

6) நான் முதல் விசாரணையில் சொன்னவாறு, எனது தம்பி இறந்துவிட்டாரா என்பதை என்னால் அப்போது உறுதியாக தீர்மானிக்க முடியவில்லை என்றும், உடனே

நான் தனியார் ஆம்புலன்சிற்கு போன்செய்து வரவழைத்தேன் என்றும், ஆம்புலன்ஸ் வந்தவுடன் நானும், எனது சித்தப்பா மகன் முப்புடாதியும் மாரிச்செல்வத்தை ஆம்புலன்சில் ஏற்றி தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம் என்றும், அங்கு மருத்துவர் எனது தம்பியின் உடலை பரிசோதனைசெய்து அவர் இறந்துவிட்டதாக சொன்னார் என்றும், மருத்துவர் காவல்நிலையத்தில் எங்களை புகார் கொடுக்கசொன்னார் என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

7) நான் போலீஸ் விசாரணையில், சம்பவ இடத்திலேயே மாரிச்செல்வம் இறந்துவிட்டான் என்று சொன்னேனா என்றால் இல்லை. இறந்துபோன மாரிச்செல்வத்தை ஆம்புலன்சில் ஏற்றி, அரசு மருத்துவமனையில் ஆம்புலன்சை நிறுத்திவிட்டு நேராக புகார் கொடுக்க சென்றோம் என்று போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நாங்கள் அரசு மருத்துவமனையில் இருக்கும்போதே எங்கள் உறவினர்களும், மாரிச்செல்வத்தின் பெற்றோரும் வந்துவிட்டாரகள் என்றால் சரிதான்.

8) நானும், முப்புடாதியும் காவல்நிலையம் சென்று காவல் உதவி ஆய்வாளரை சந்தித்தோம். அவர் எங்களை புகார் கொடுக்க சொன்னார் என்றால் நாங்கள் காவல்நிலையம் செல்லும் முன்னரே புகாரை தயார் செய்துதான் எடுத்துசென்றோம். புகாரை எனது தம்பி முப்புடாதிதான் எழுதினார். நான் சொன்னதுபோல் எனது தம்பி எந்த புகாரையும் எழுதி காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தினம் நாங்கள் காவல்நிலையத்தில் சுமார் 45 நிமிடங்கள் இருந்தோம், அதன் பின்னர் நான் காவல்நிலையத்திற்கு செல்லவில்லை. புகாரில் உள்ள கையெழுத்து மற்றும் கையொப்பம் எனது தம்பியினுடையது கிடையாது என்றால் சரியல்ல. புகாரில் நாங்கள் போய் ஆம்புலன்சை வரசொன்னதாக எழுதப்பட்ட பின்னர், அடித்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அப்போது இருந்த பதட்டத்தின் காரணமாக மேற்படி திருத்தம் செய்யப்பட்டது. புகார் மனுவில் உள்ள முப்புடாதியின் கையெழுத்திற்கும், அவரது கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. புகாரில் உள்ள சங்கதிகள் நிறுத்தி நிதானமாக எழுதப்பட்டுள்ளது என்றும், கையொப்பம் கிறுக்கி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், பதட்டத்தின் காரணமாக அவர் அவ்வாறு எழுதியுள்ளார்.

9) சம்பவத்திற்கு பின்னர் நான் எதிரியை பார்க்கவில்லை. அன்றைய தினம் இரவு எதிரியை காவல்நிலையத்தில் பிடித்து வைத்திருந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தன்று நான் பயன்படுத்திய இருசக்கர வாகனம் குறித்து ஆய்வாளர் என்னை விசாரணை செய்தாரா என்பது குறித்து எனக்கு நியாபகமில்லை. என்னுடைய அலைபேசியை வாங்கி ஆய்வாளர் ஆய்வு செய்தாரா என்பதும் எனக்கு நியாபகமில்லை. சம்பவத்தின்போது எனது தம்பியை காப்பாற்றுவதற்கு நானும், முப்புடாதியும் அக்கம்பக்கம் உள்ளவர்களிடம் உதவிகேட்டோ அல்லது கீழே கிடந்த கற்களை எரிந்தோ காப்பாற்ற முயற்சிசெய்தோமா என்றால் எதிரியிடம் அரிவாள் இருந்த காரணத்தினால் எங்களால் எதுவும் செய்யமுடியவில்லை.

10) சம்பவத்திற்கு முந்தைய தினம் இரவு எங்கள் ஊரில் ஒரு கலவரம் நடந்தது என்றும், அதன் காரணமாக எங்கள் ஊரில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது என்றும், மெயின்ரோட்டில் எனது தம்பி வெட்டுப்பட்டு கிடப்பதாக தகவல் தெரிந்து பாதுகாப்பிற்கு வந்த போலீசார் சம்பவ இடத்திற்கு உடனே சென்றுவிட்டார்கள் என்றும், போலீசார் இறந்த நபரை பார்த்து ஆய்வாளருக்கு தகவல் சொல்லி உடனே ஆய்வாளரும் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார் என்றும், ஆய்வாளர் வந்த பிறகு எங்களுக்கு தகவல் சொல்லி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வரவழைத்து எங்களை விசாரணை செய்தார் என்றும் சொன்னால் சரியல்ல. இறந்தவர் சம்பவ இடத்தில் பிணமாக கிடந்தபோதே, போலீசார் அங்கு வந்துவிட்டார்கள் என்றும், நான் ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொல்வதும், அதன் பின்னர்புகார் கொடுத்ததாகசொல்வதும் காலதாமதத்தை சரிகட்டும் நோக்கத்திலும் கண்கண்ட சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்களை சாட்சியாக போட்டு பின்னிட்டு வழக்கு தயார் செய்ய ஏதுவாக இருக்கும் என்பதாலும், போலீசாரின் அறிவுறுத்தலின் பேரில் வழக்கு ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்றால் சரியல்ல.

11) இந்த வழக்கில் முதலில் போலீசாருக்கு அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு மாரிச்செல்வம் இறந்துவிட்டார் என்று கிடைத்த தகவல் மறைக்கப்பட்டு, அதன் பின்னர் இரவு 08.00 மணிக்கு மேல் இந்த புகார் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரிக்கும், இறந்துபோன மாரிச்செல்வத்திற்கும் இடையே

இருந்த வாகன சேதம் சம்பந்தமான முன்விரோதம் இருதரப்பிலும் பேசி சமரசம் செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி வாகன சேத சம்பவம், சம்பவத்திற்கு சுமார் 2 வருடங்களுக்கு முன்னால் நடைபெற்றது என்றால் இருக்கலாம். அந்த வழக்கிற்கு பின்னர் எதிரி சரவணனுக்கும், மாரிச்செல்வத்திற்கும் இடையே வேறு தகராறுகள் நடந்ததாக வழக்கு இல்லை என்று சொன்னால் சரிதான். இறந்து போன எனது தம்பி எங்கள் ஊரில் ஒரு ரவுடி என்றும், அவருக்கு ஊரில் பல்வேறு எதிரிகள் உள்ளனர் என்றும் சொன்னால் சரியல்ல.

12) நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல், நானும், முப்புடாதியும் சம்பவ சமயத்தில் இருசக்கர வாகனத்தில் சென்றதாக சொல்வதும், சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்வதும், எதிரி எங்களை மிரட்டியதாக சொல்வதும், சம்பவ இடத்திலிருந்து நான் ஆம்புலன்சிற்கு போன் செய்து வரவழைத்ததாக சொல்வதும், அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

13) போலீசார் தான் சம்பவ இடத்திலிருந்து எனது தம்பியின் சடலத்தை ஆம்புலன்சில் எடுத்து சென்று அரசு மருத்துவமனை பிணக்கிடங்கில் ஒப்படைத்தார்கள் என்றால் சரியல்ல. எதிரி சரவணன் எங்கள் ஊரில் ஒரு நாட்டாண்மை என்றால் சரிதான். ஏற்கெனவே எங்கள் ஊர் நாட்டாண்மை சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு, அந்த விரோதத்தின் காரணமாக எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் எங்களை சம்பவம்நடந்த இடத்திற்கு அழைத்து சென்று விசாரணை செய்தார் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு, காவல் ஆய்வாளர் எங்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

14) பிரேத பரிசோதனைஅறையில் நின்றுகொண்டிருந்தபோது, எங்கள் ஊரை சேர்ந்த முப்புடாதி என்ற நபர் எதிரி முத்துக்குமார் இந்த சம்பவத்தை தூண்டிவிட்டார் என்று சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. சம்பவ தினத்திற்கு முந்தைய நாள் நடந்த கலவரத்தில் எதிரி முத்துக்குமார் தாக்கப்பட்டு காயமடைந்த விவரம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. எங்கள் ஊரை சேர்ந்த மிராசு அருணாசலம் என்பவர் எனக்கு சித்தப்பா முறைவேண்டும். எதிரி முத்துக்குமாரை அந்த கலவரத்தில் அருணாசலத்தின் மகன் முத்துமாரி என்பவர் தாக்கியதாக ஒரு வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் அதுபற்றி

எனக்கு தெரியாது. 23.04.2022ம் தேதி காலையில் குற்ற எண். 242/2022 வழக்கில் அருணாசலம் மற்றும் முத்துமாரியின் மீது மேற்படி வழக்கு பதிவுசெய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கின் விரோதம் காரணமாக எனது உறவினர் அருணாசலத்தின் தூண்டுதலின் காரணமாக இந்த வழக்கில் 2ம் எதிரி முத்துக்குமார் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

15) இந்த கொலை சம்பவம் தொடர்பாக முதலில், பொன்னுசாமி மகன் சரவணன் மற்றும் அவரது உறவினர்களை தென்காசி போலீசார் அழைத்து சென்று விசாரணை செய்த விவரம் எனக்கு தெரியாது. பொன்னுசாமி மகன் சரவணனும், எனது தம்பி மாரிச்செல்வமும் பேசிக்கொள்ளமாட்டார்கள் என்றும், அவர்களுக்கிடையே பகை இருந்தது என்றும் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவ இடத்தை போலீசாருக்கு காட்டுவதற்கு நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்றேன் என்றால் சரிதான். அப்போது ஆய்வாளர் என்னுடைய இருசக்கர வாகனத்தை பார்த்தாரா என்றால் பார்த்தார்.

16) ஆய்வாளர் முதலில் சவக்கிடங்கு சென்று எனது தம்பியின் உடலை பார்த்துவிட்டு அதன் பின்னர்தான் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் இருந்த நபர்களை அங்கேயே ஆய்வாளர் விசாரணைசெய்துவிட்டு, அதன்பின்னர் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் சரிதான். நான் காவல்நிலையம் சென்றதாக சொல்வதும், அங்கு எனது தம்பி புகார்மனு கொடுத்ததாக சொல்வதும் பொய் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் தயார் செய்து கொடுத்த புகாரில் எனது தம்பி கையொப்பம் மட்டும் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால்சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எனது தம்பி மாரிச்செல்வம், சம்பவ இடத்திற்கு செல்வதற்குமுன்னர் காமராஜர் சிலை அருகே மட்டும் வாகனத்தை நிறுத்தினார், நான் காமராஜர் சிலை அருகே நான் நிற்கவில்லை. 23ம் தேதி மாலை 04.00 -04.30 மணியளவில் பிணவறை அருகே வைத்து ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல், காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு மீண்டும் அரசு

மருத்துவமனைக்கு வந்தபோது எனது உறவினர் முப்புடாதி என்பவர் 2ம் எதிரி முத்துக்குமார் காமராஜர் சிலை அருகே வைத்து மாரிச்செல்வத்திடம் தகராறு செய்தார் என்றும், அதன் பின்னர் தனது மாமா சரவணனுக்கு மாரிச்செல்வம் வருவது பற்றி தகவல் கொடுத்து மாரிச்செல்வத்தின் கதையை முடிக்க சொன்னார் என்று சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது தம்பி மாரிச்செல்வம், காமராஜர் சிலை அருகே தனது வாகனத்தை நிறுத்திய விவரம் பற்றி நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன வாகனத்தில் கோழிப்பண்ணைக்கு சென்றதாக சொல்வதும், அதன் பேரில் இந்த வழக்கு சம்பவத்தை பார்த்ததாகசொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் சொல்லும் நேரத்திற்கு முன்பே மாரிச்செல்வம் இனம்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு இறந்தார் என்றும், அந்த வழியாக சென்ற நபர்கள் போலீசிற்கு தகவல் சொல்லி போலீசார் மாரிச்செல்வத்தை எடுத்து சென்ற பின்னர் தான் நாங்கள் தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரியல்ல.

என்னை விசாரித்ததாக சொல்லும் 24.04.2022 அன்றுதான், 2ம் எதிரியை ஈடுபடுத்தி என்னுடைய வாக்குமூலம், எனது சித்தப்பா அருணாசலத்தின் ஏற்பாட்டின்பேரில் பொய்யாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது எனது சித்தப்பா அருணாசலம் மற்றும் உறவினர்கள் சொல்லிக்கொடுத்ததை சாட்சியமாக அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ-1 புகார் எனது தம்பியால் எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் புகார், பார்வைமகசர் மற்றும் ஆவணங்களை அனைத்தும் காவல்நிலையத்தில் பணிபுரியும் ஒரே நபரால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை ஒப்பீடு செய்து பார்த்தால், அவை அனைத்தும் ஒரே நபரால் எழுதப்பட்டது துலங்கும் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் எங்கு பேப்பர், பேனா வாங்கி புகார் எழுதினோம் என்பது குறித்து போலீசார் எங்களிடம் கேட்கவும் இல்லை, நாங்கள் சொல்லவும் இல்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi